

ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி ரெட்டியார்சத்திரத்தில் நடைபெற்ற விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி ரெட்டியார்சத்திரம் வடக் கு ஒன்றியத்திற்குட்பட்ட 10 கிராம ஊராட்சிளைச் சேர்ந்த 110 கிரிக்கெட் குழுவினருக்கு சொந்த செலவில் கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்களை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார். அருகில் கிழக்கு மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் சிவகுருசாமி, மணி, ஒன்றிய இளைஞரணி அமைப் பாளர் ரமேஸ் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## ஒரே நாளில் ரூ.302.73 கோடி வசூல்!

# புதிய மைல்கல்லை எட்டிய பதிவுத்துறை!

### அமைச்சர் பி.மூர்த்தி தகவல்!



சென்னை, டிச. 4–

தமிழ்நாடு அரசின் வருவாய் ஈட்டும் துறைகளில் முக்கியதுறையாகவிளங்கிவரும் பதிவுத் துறையில் 01.12.2025 அன்று கார்த்திகை மாத சுப முகூர்த்த நாளில் ஆவணங்கள் அதிக அளவில் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் என்பதால் சிறப்பு நிகழ்வாக பொதுமக்கள் பயன் பெறும் வகையில் கூடுதலாக முன்பதிவு வில்லைகளின் எண்ணிக்கை உயர்த்தி வழங்கப்பட்டது.

அதன்படி, பொது மக்கள் உயர்த்தப்பட்ட முன் ஆவணப் பதிவு வில்லைகளைப் பயன்படுத்தி கடந்த 01.12.2025 அன்று ஒரே நாளில் இதுவரையில் இல்லாத அளவில் ரூ.302.73/– கோடி (முந்நூற்று இரண்டு கோடியே எழுபத்து மூன்று இலட்சம் ரூபாய்) வருவாய் அரசுக்கு ஈட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு நாள் வருவாய் வசூலில் புதிய மைல்கல்லை பதிவுத்துறை எட்டியுள்ளது என வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தெரிவித்துள்ளார்.

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு

# நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி தி.மு.க. மாணவர் அணி சார்பில் மதிய உணவு - நலத்திட்ட உதவிகள்!

### மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் வழங்கினார்!

நாகர்கோவில், டிச.4–

கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி தி.மு.க. மாணவர் அணி சார்பில் 02.12.2025, செவ்வாய்க்கிழமை அன்று மதியம் 12.30 மணியளவில் வடசேரி, கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள சினேகம் ஆதரவற்றோர் இல்லத்தில் நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி மாணவர் அணி அமைப்பாளர் ஜிஜா எஸ்.டினாட்ஸ் கோசிஜேன் தலைமையில், நாகர்கோவில் மாநகர மாணவர் அணி அமைப்பாளர் ஜெ.முஹம்மது ஸாலிஹ் முன்னிலையில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு ஆதரவற்றோர்களுக்கு மதிய உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளையும் வழங்கி சிறப்பித்தார்.

நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப. ஆனந்த், நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி செயலாளர் மு.சேக்மீரான், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அ. அருண்காந்த், மாமன்ற உறுப்பினர்கள் நெ.கலாராணி, சூ.அமல செல்வன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.சதாசிவன், நாகர்கோவில் மாநகர அவைத்தலைவர் ப.பன்னீர் செல்வம், துணை செயலாளர் பி. வேல்முருகன், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வி.அகஸ்தீசன், லதா கலைவாணன், கோ.ராதா கிருஷ்ணன், ஐ.குமரி மணிமாறன், நாகர்கோவில் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் ரெ.சகாய மைக்கேல் ராஜன், பூ.சிதம்பரம், சார்பு அணிகளின் நிர்வாகிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி தி.மு.க. மாணவர் அணி சார்பில் சினேகம் ஆதரவற்றோர் இல்லத்தில் பகுதி அமைப்பாளர் ஜிஜா எஸ்.டினாட்ஸ் கோசிஜேன் தலைமையில், மாநகர மாணவர் அணி அமைப்பாளர் ஜெ.முஹம்மது ஸாலிஹ் முன்னிலையில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் ஆதரவற்றோர்களுக்கு மதிய உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளையும் வழங்கி சிறப்பித்தார். நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், மு.சேக்மீரான், அ.அருண்காந்த், நெ.கலாராணி, சூ.அமல செல்வன், ஆர்.சதாசிவன், ப.பன்னீர்செல்வம், பி.வேல்முருகன், வி.அகஸ்தீசன், லதா கலைவாணன், கோ.ராதா கிருஷ்ணன், ஐ.குமரி மணிமாறன், ரெ.சகாய மைக்கேல் ராஜன், பூ.சிதம்பரம், சார்பு அணிகளின் நிர்வாகிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம்,அ.வேலாயுதபுரம் கிராமத்தில் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.4 கோடி 80லட்சம் மதிப்பீட்டில் அ.வேலாயுதபுரம் தூத்துக்குடி நெடுஞ்சாலை இடையே சாலை அமைக்கும் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி. .மார்கண்டேயன் துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள் அன்புராஜன், ராமசுப்பு, இம்மானுவேல், மாவட்ட பிரதிநிதிகள் புதுராஜன், ஆதிசங்கர், வடக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஆகாஷ் பாண்டியன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.


